1981 மார்ச் 3]

சலுகையை வழங்கலாம் என்றும், மீனவ கிறிஸ்தவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகையை வழங்கலாம் என்றும், இந்து கிறிஸ்தவர்களை மேற்கண்ட இரு பிரிவினரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்றும் அறிக்கை தரப்பட்டது. மீனவர்களிலேயே ஆறு பிரிவினர்களாக இருப்பவர்களையும் பிற்பட்டவர்களாக ஆக்கலாம் என்று கருதி, அவர்களுக்கும் பிற்பட்டோருக்குரிய சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. பறவர், மூத்தவர், பர்வதராஜு குலத்தினர், பட்டணவர், செம்படவர் மற்றும் மீனவர் ஆகிய ஆறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் பிற்பட்டவர்களுடைய பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. இன்னும் வேறு சமூகங்களுக்கும் இதுபோல் சலுகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அவர்களுடைய சமூக நிலை, பொருளாதார நிலை இவைகளையெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. இது பற்றி இப்போது புள்ளிவிவரம் எடுக்க தனி அலுவலருக்குச் சொல்லியிருக்கிறோம். முழு விவரம் வந்த பிறகு, பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்கள் இவர்களுடைய கோரிக்கையை நீடு ஆராய்ந்து ஒரு அறிக்கை தரும்படி கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு அரசு இதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் நியமனம்.

*129 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் நியமனம் செய்துள்ள நேர்வுகளில் பணிமூப்புடையோர், பணிக்காலம் குறைந்தவர்களைவிட குறைவாக ஊதியம் பெறும் நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்நிலை, அரசு ஊழியர்களின் அடிப்படை விதி 22-பி-க்கு முரணானது என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், இந்நிலையைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(இ) & (உ) பணிமூப்பில் முதியவர்கள் தலைமை ஆசிரியராக பதவி வகிப்பதற்கு பதிலாக, பணிமூப்பில் இளையவர்கள் தலைமையாசிரியராக நியமனம் செய்யப்பட்டிருந்ததால், இவர்கள் ஆசிரியர்களாக பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த சூழ்நிலையில் பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஊதிய இழப்பு இருக்கக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தில்

[1981 மார்ச் 9

இவர்கள் தலைமை ஆசிரியர் பதவி வகித்தபோது பெற்ற ஊதியத்தைத் தொடர்ந்து பெற ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணை, பன்முறை வெளியிடப்பட்ட ஆணைகள் மற்றும் உயர்நீதி மன்றம் வழங்கிய கருத்துரைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. இது ஒரு தனிப்பட்ட நிலைமையாகும். இவர்களுக்கு இணையாக பணிமூப்பின் காரணமாக தற்போது தலைமையாசிரியராகப் பதவி பெற்றவர்களுடைய ஊதியத்தை உயர்த்த இயலாது.

திரு. ம. சங்கரலிங்கம்: 22-பி என்பது அடிப்படை விதி. அடிப்படை உரிமையை பாதுகாக்கிற ஒரு விதி. பணிமூப்புடையோர், பணிக்காலம் குறைந்தவர்களைவிடக் குறைவாக ஊதியம் பெறக்கூடாது. எந்தச் சூழ்நிலையில் அமைந்தாலும்கூட, பணிமூப்பில் உள்ளவர்களைத்தான் தலைமையாசிரியர்களாக நியமித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே பணிக்காலம் குறைந்தவர்களை நியமித்திருக்கிறார்கள். மூப்பில் உள்ளவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று உத்தரவு பெற்றாலும்கூட, பணிமூப்பில் இளையவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமித்தது அவர்களுடைய தவறல்ல. அது நிர்வாகத்திலிருப்பவர்களால் ஏற்பட்ட தவறு. எனவே 22-பி சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுமா? அப்படிக் கொடுக்கப்பட்டால், அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படும்? ஏன் அரசு அதைத் தர மறுக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அடிப்படை விதிகள் எப்.ஆர். 22-பி விதியை பின்பற்றும்போது ஏற்படும் ஊதிய மாறுபாட்டைத் தவிர்க்க பணிமூப்பு அடிப்படையில் ஊதியத்தை மாற்றியமைக்க முடியாது என்று தான் சொல்லப்படுகிறது. 22-பி விதியின் காரணமாக மட்டும் ஊதிய வேறுபாடுகள் எழலாம். இதுபற்றி 22-பி மூன்றாவது உட்பிரிவில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: இதனால் எவ்வளவு நிதி இழப்பு ஏற்படும் என்பதையும் காரணம் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நிதி அடிப்படையைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் தவறு இல்லாமல் அதிகாரிகள் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்படியான நிலை ஏற்பட்டு, அதிகாரிகளுடைய தவறு இதில் இருக்குமானால், அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விதி 22-பி-யின் 3-வது பிரிவில் தெளிவாக இதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது. கொடுக்க வேண்டுமென்ற கண்டிப்பு இல்லை. எவ்வளவு இழப்பு ஏற்படும் என்று சொல்வதற்கு இங்கே இடமும் இல்லை. அரசு ஆணையை உயர் நீதிமன்றம் 2—11—1979-லேயே அங்கீகரித்துள்ளது. அதற்குப் பின்பு இப்போது தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

1981 மார்ச் 9]

திரு. பா. ரா. தாமஸ்: எந்த நிலையிலும் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஊதிய இழப்பு ஏற்படக் கூடாது என்று தான் விதியில் இருக்கிறது. அந்த அடிப்படையில் இவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எந்த நிலையிலும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குறிப்பாக ஊதிய இழப்பு ஏற்படக்கூடாது என்பதுதான் அரசுடைய நோக்கமும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விதியின்படிதான் இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டன. அதை எதிர்த்து இப்போது உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் இருப்பதால், இவைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

Provident Fund Accounts of Teachers of Panchayat Union Schools

*130 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the provident fund accounts of the teachers working in Dindigul, Athoor and Thoppampatti Panchayat Union Schools, are not being maintained properly, resulting in inordinate delay in the disposal of Pension papers; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (இ) குறிப்பிட்டுள்ள ஒன்றியங்களில் வைப்பு நிதி கணக்குகள் சரிவர பராமரிக்கப்பட்டு, 1979-80 ஆண்டிற்கான கணக்குத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் ஓய்வூதியம் பற்றிய கருத்துரு ஒன்றும் நிலுவையில் இல்லை என்றும் அறியப்படுகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களிலும் நகரவை நிர்வாகங்களிலும் இவ்வாறு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் சரிவர வைக்கப்படவில்லை. இதை எல்லோரும் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது குறையில்லாமல் இருக்கிறது என்று கூறுவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வருங்கால வைப்பு நிதியுடன் கூட்டப்பட வேண்டிய வட்டியையும் சேர்த்து ஆசிரியர்களுக்குக் காட்டும் வகையில் அறிவுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 2—3—1981 அன்று வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினா எண் 103 ஒத்திப்போடப்படுகிறது.